ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2421 - 2025 ජනවාරි මස 24 වැනි සිකුරාදා - 2025.01.24

2421 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு சனவரி மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (II ஆ) – பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 72 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - |
| - | |
| உத்தியோகத்தொடர்பற்ற அறிவித்தல்கள் | 78 |
| அந்நியகுடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| ஏல விற்பனைகள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**
**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபு{ர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2025, பெப்புருவரி மாதம் 14ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2025, சனவரி மாதம் 31 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கே.ஜீ. பிரதீப் புஷ்ப குமார,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

85 - B 82648 - 403 (2025/01)

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

**மேல் நீதிமன்றம் - கிளிநொச்சி**

கிளிநொச்சி மேல் நீதிமன்றினால் பறிமுதல் செய்யப்பட்ட வாகனங்கள் ஏல விற்பனை செய்தல்

1. கிளிநொச்சி மேல் நீதமன்றினால் பறிமுதல் செய்யப்பட்டதும் இதுவரை உரிமை கோரப்படாததுமான வாகனங்கள் 2025.02.08 ஆந் திகதி மு.ப. 9.00 மணிக்கு இந் நீதிமன்ற வளாகத்தினுள் பகிரங்க ஏல விற்பனை மூலம் விற்கப்படும்.

2. ஏல விற்பனைக்கு உட்படுத்தும் பொருட்களை உரிமை கோரபவர்கள் யாராவது இருக்குமிடத்து ஏல விற்பனை ஆரம்பமாவதற்கு 1/2 மணித்தியாலத்திற்கு முன்னர் தமது கோரிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும்.

3.ஏல விற்பனைப் பொருட்களை ஏல விற்பனை ஆரம்பமாவதற்கு 1/2 மணித்தியாலத்திற்கு முன்னர் இம் மன்றின் பதிவாளரின் அனுமதியுடன் பார்வையிட முடியும்.

4. ஏல விற்பனைக்கு உட்படுத்தும் பொருட்களுக்கு உரிய கேள்வி இல்லாதவிடத்து அப்பொருளின் ஏலவிற்பனையை மீளப்பெறும் உரிமையை மன்று தன்னகத்தே கொண்டுள்ளது.

5. ஏல விற்பனையில் விற்கப்பட்ட பொருட்களுக்குரிய பணத்தை உடன் செலுத்தி, பொருட்களை நீதிமன்ற வளாகத்திலிருந்து உடனடியாக அப்புறப்படுத்தல் வேண்டும். கொடுப்பனவுகள் பணமாகவே செலுத்தப்பட வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

6. ஏல விற்பனையில் பங்குபற்றுபவர்கள் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் செல்லுபடியான ஆவணங்களுடன் பிரசன்னமாக இருத்தல் வேண்டும்.

ஏ.ஜீ. அலெக்ஸ்ராஜா,
மேல் நீதிமன்ற நீதிபதி,

மேல் நீதிமன்றம்,
கிளிநொச்சி.

| *தொ. இல.* | *வழக்கு இல.* | *வாகன வகை* | *பதிவிலக்கம்* | *கணிக்கப்பட்ட பெறுமதி* |
|---|---|---|---|---|
| 01. | NP/HC/KN/144/23 | மோட்டார் சைக்கிள் | NP/ BEM 9365 | 60,000 |
| 02. | NP/HC/KN/32/23 | படகு | A-3064MNR | 5,000 |

01- 718

---

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

**ஒன்றிணைத்தல் பற்றிய அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 242(3)(b) ஆவது பிரிவுக்கு அமைவாக

ஏசியா செக்யூரிடீஸ் ( பிறைவட்) லிமிடட் என்ற நிறுவனம் ஏ- செக் கேபிடல் ( பிறைவட்) லிமிடட் என்ற நிறுவனத்துடன் ஒன்றிணைத்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 242(1) ஆவது பிரிவுக்கு ஏற்ப ஒன்றிணைப்பிற்கான தீர்மானம் ஒன்றை ஏசியா செக்யூரிடீஸ் ( பிறைவட்) லிமிடட் ( கம்பனி இல.PV 1924) மற்றும் ஏ- செக் கேபிடல் ( பிறைவட்) லிமிடட் ( கம்பனி இல.PV 123297) ஆகிய நிறுவனங்களின் பணிப்பாளர் சபைகள் மேற்கொண்டுள்ளன என்பதோடு, அதன் மூலம் ஏசியா செக்யூரிடீஸ் ( பிறைவட்) லிமிடட் மற்றும் ஏ-செக் கேபிடல் ( பிறைவட் ஆகிய நிறுவனங்கள் ஒரு தனி நிறுவனமாக ஒன்றிணைக்கப்படுவதோடு ஒன்றிணைக்கப்பட்ட நிறுவனம் ஏசியா செக்யூரிடீஸ் ( பிறைவட்) லிமிடட் ஆகும்.

மேற் சொல்லப்பட்ட ஒன்றிணைப்பானது 2025, மாச்சு மாதம் 01 ஆந் திகதியிலிருந்து அமுல்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

ஏசியா செக்யூரிடீஸ் ( பிறைவட்) லிமிடட் ,
ஏ- செக் கேபிடல் ( பிறைவட்) லிமிடட்.

01- 738

---

**அறிவித்தல்**

DURO PIPE INDUSTRIAL (PVT)
PV 2057
நிலையான மூலதன குறைப்பு

இதை அறிவிப்பது, 2007 ஆம் ஆண்டின் நிறுவன சட்டம், பிரிவு 59(2) இன் கீழ், DURO PIPE INDUSTRIAL (PVT) Ltd. PV 2057 தனது சட்டமென கூடிய மூலதனத்தை தற்போதைய மதிப்பான ரூ. 304,000,000 ( மூந்நூற்றுநான்கு மில்லியன் ரூபாய் ) இருந்து ரூ.48,197,332( நாற்பத்தெட்டு மில்லியன் நூற்றுத் தொண்ணூற்றேழு முன்னூற்று முப்பத்தியிரண்டு வரை குறைப்பதற்கு 2025 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 26 ஆந் திகதி சிறப்புத் தீர்மானம் மேற்கொள்ளவுள்ளது.

பணிப்பாளர் சபையின் உத்தரவின்படி,

Universal Corporate Sevices ( Pvt) Ltd,
நிறுவன செயலாளர்.

01- 722